www.padippakam.com



மற்ற உலக மக்கள்
தேவையைப் பொறுத்து
தொழில் செய்கிறார்கள்.
இங்குதான் சாதியைப் பொறுத்து
தொழில் இருக்கிறது.
- பெரியார் -

VADU

இதழ் -08 ஜன-பெப்ரவரி - 2008

தொடர்புகட்கு:-
F.D.S.D.S
70, SQUARE DES BAUVES
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

நன்கொடை-1€
சந்தா வருடம் -15€
(தபாற்செலவு உட்பட)

இலங்கை, இந்திய வாசகர்களுக்கு இலவசம்.

வடிவமைப்பு — விஜி

*அன்புடன் வாசகர்களுக்கு!*

மீண்டும் ஒரு மடலில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. இம்முறை "வடு" வில் சிறப்புப்பக்கமாக எமது தலித்சமூகமேம்பாட்டு முன்னணியின் தலைவர் திரு.தேவதாசன் அவர்கள் 'எறிகணைகள்' எனும் இணையத்தளமொன்றிற்கு வழங்கிய பேட்டியை எமது வாசகர்களுக்காக மீள்பிரசுரித்துள்ளோம். எமது வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் எமது செயற்பாடுகளை முறியடிக்க ஆதிக்க சாதி மூலோபாயங்கள் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்படுகின்றது என்பதனையும் புரிந்துகொள்ள அது உங்களுக்கு உதவலாம். மற்றும் இலங்கையிலிருந்து குறிப்பாக வடக்கிலிருந்து எமக்கு பெருந்தொகையான கடிதங்கள் வந்தவண்ணம் உள்ளன. எமது தலித்மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளை அவை விபரிக்கும் விதம் மனங்களை நெருடச்செய்கின்றது. இன்னுமா? இப்படியா? என கேட்கத்தூண்டுகின்றது. ஆயுத அடக்குமுறைக்குள் வாழும் அந்த சூழலில் இருந்து எம்முடன் தொடர்பு கொள்ள துணிதலே பெருங்காரியமாயிருப்பதால் அந்த வாசகர்களின் விபரங்களை வெளியிடுவது உசிதமல்ல என்று கருதுகின்றோம். எனினும் அக்கடிதங்களின் உள்ளீடுகளை மட்டும் எதிர்வரும் வடு இதழ்களில் உங்களுக்காக பிரசுரிக்க உள்ளோம்.

மேலும் பரிஸ் தலித்மாநாட்டினூடாக நாம் எழுப்பிய அதிர்வலைகள் எமது அடுத்த மாநாடொன்றை லண்டன் மாநகரில் நடத்தும் சாத்தியபாட்டை உருவாக்கி தந்திருக்கிறது. இதனை சென்ற இதழிலும் வாசகர்களுக்கு அறியப்படுத்தியிருந்தோம். அந்தவகையில் எதிர்வரும் 16, 17 ம் திகதிகளில் லண்டனில் நடத்தப்படவிருக்கும் அம்மாநாட்டில் கலந்துகொள்ள எமது வாசகர்களை, புகலிடவாழ் தலித்மக்களை, தலித் அரசியலில் அக்கறைகொண்டோரை கூடியவரை முயலுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இம்மாநாட்டுக்காக இந்தியாவிலிருந்து தலித் சிந்தனையாளரும் எழுத்தாளருமான அ.மார்க்ஸ் அவர்கள் சிறப்பு பேச்சாளராக வருகை தருகின்றார் என்பதனையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

இலங்கையின் தேசிய பிரச்சனைக்கு காணப்படபோகின்ற அதிகார பங்கீடுகளில் எமது தலித் மக்களின் இடம் என்ன என்ற கேள்விகளை நாம் கடந்த இரண்டு வருடங்களாக புகலிட நாடுகளில் இடம்பெறும் அரசியல் சந்திப்புகள் எங்கும் எழுப்பிவருகின்றோம். இதன் தொடர்ச்சியாக லண்டன் மாநாட்டின் ஊடாகவும் தலித் மக்களின் கேள்விகளை பலமாக எழுப்ப அனைவரும் வாரீர் என "வடு" அறைகூவல் விடுக்கின்றது.

— ஆ.ர். —

இது மாதமொருமுறை வெளியாகும் ஏடு

படிப்பகம்

www.padippakam.com

## சாதியம் ஒழிக்கப்பட வேண்டுமானால் சாதியினால் ஒடுக்கப்பட்டவர்களே அப்போராட்டத்திற்கு தலைமை ஏற்கவேண்டும்.

த.ச.மே.முன்னணியின் தலைவர் தேவதாசன் அவர்கள் "எறிகணை" இணையத்தளத்திற்கு வழங்கியபேட்டியின் ஒருபகுதி எமது வாசகர்களுக்காக...

**எறிகணைகள்...**

உங்கள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டு 1வருடத்திற்கு மேலாகிறதென்று நினைக்கிறேன். இதுவரை இலங்கையில் இன்றும் தலித்துக்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்களின் இடர்களுக்கு தீர்வாக அல்லது அந்த தீர்வின் அடிப்படையிலான அந்த மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில் எப்படியான செயல்பாடுகளை முன்னெடுத்திருக்கிறீர்கள்? இது தொடர்பாக உங்கள் முன்னணியால் முன்வைக்கப்படும் அல்லது செயல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் என்ன.?

**தேவதாசன்...**

தமிழ்மக்களுக்கு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டு நிர்வாக பரவலாக்கல் செய்யப்படும் போது ஆண்டாண்டு காலமாக கல்வி,பொருளாதார,வேலைவாய்பு மற்றும் பலவகையிலும் பின்தள்ளப்பட்டிருக்கும் மக்கள் மேம்படும் முகமாக இணைக்கப்பட வேண்டிய திட்டாய்வுகளை அரசியல் தலைமைகளுக்கும், தீர்வுபற்றி பேசுபவர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கிறோம். அந்த அறிக்கையை "தூ" இணையத்தளத்தில் நீங்கள் இப்போதும் பார்வையிடலாம்.
இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளில் வாழும் தலித் மக்களுக்கு விழிப்புணர்சியை ஏற்படுத்தும் வகையிலும்,முற்போக்கு சக்திகளை ஒன்றிணைக்கும் வகையிலும் தொடர்ந்து மாநாடுகள்,கருத்தரங்குகளை ஏற்பாடு செய்கிறோம். எமது கருத்துகளை கூறுவதற்காக "வடு" என்னும் பத்திரிகையை மாதம் ஒரு முறை வெளிக்கொண்டு வருகின்றோம். முதலாவது மாநாட்டின் தொடர்ச்சியாக லண்டனில் இரண்டாவது மாநாடு நடைபெற இருக்கிறது. எங்களது சக்திக்கு உட்பட்ட வகையிலான வேலைத் திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

**எறிகணைகள்....**

அண்மையில் பிரான்சில் உங்கள் அமைப்பால் நடாத்தப்பட்ட மாநாடு மிகவும் வெற்றியளித்திருப்பதாக மாநாட்டின் இறுதியில் நீங்கள் தெரிவித்திருந்தீர்கள் எந்த வகையில் மாநாடு வெற்றியளித்துள்ளதாக கருதுகின்றீர்கள்?

**தேவதாசன்....**

இரண்டாவது மாநாடு லண்டனில் நடாத்துவதற்காக பல நண்பர்கள் முன் வந்திருப்பதே முதலாவது மாநாட்டின் வெற்றிதானே.
மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் கொடி பிடித்து கோசம் போடும் ரசிகர்கள் அல்ல. மாறாக மாற்றுக்கருத்து கொண்டவர்கள், சாதிமுறைமையின் அழிவின்மீது ஆர்வம் கொண்டவர்கள், முற்போக்கு சக்திகள்,பத்திரிகையாளர்கள், இடதுசாரிகள் என பலதரப்பட்ட பல திறமைவாய்ந்த சக்திகளின் சந்திப்பாக இருந்தது. பல விடயங்கள் பேசப்பட்டன. முதலாவது மாநாடுபற்றிய தொகுப்பு புத்தக வடிவில் விரைவில் வெளிவரவிருக்கிறது. மாநாட்டிற்கு முன்னர் இலக்கியச் சந்திப்புகளிலும், சிறு கலந்துரையாடல்களிலும் பேசப்பட்டவிடயம் இன்று தமிழர்கள் வாழும் நாடுகள் முழுவதும் பேசப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகளில் பலவிதமான எமக்கு சார்பாகவும் எம்மை விமர்சித்தும் கருத்துக்கள் வெளிவருகிறது. இவைகள் யாவும் மிகப்பெரும் வெற்றியாகவே நாம் கருதுகிறோம். தலித் என்ற சொல்லை ஏற்றுக்கொள்ளாத பலர் இன்று ஏற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்..

**எறிகணைகள்....**

மிகப்பாரம்பரிய இடதுசாரிய சிந்தனையாளர்களினாலும், அந்த மக்களுடன் மக்களாகவே வாழ்ந்து, தலித்திய ஒடுக்கு முறைகளை சந்தித்து, அவற்றிற்கு எதிராக களத்தில் நின்று குரல்கொடுத்து போராடிய அன்றைய அமைப்புகளின் செயல்பாடுகளுக்கும்,போராட்டங்களுக்கும் ஈடாக அந்த மக்களிடமிருந்து அன்னியப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களால் இங்கிருந்து கொண்டு எதனைத்தான் செய்துவிட முடியும் என எண்ணுகின்றீர்கள்?

**தேவதாசன்....**

தலித்துகள் தங்கள் உரிமைக்காக போராடி வெற்றிகளைப் பெற்றுக்கொண்டிருக்கையில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஈழப் போராட்டம் பின்னர், ஆயுதப்பேராட்டம் எனத்தொடர்ந்து இப்போது முப்பது வருடங்கள் முடிவுற்றுப் போய்விட்டது. ஆனால் சாதிய அமைப்பு வடிவம் அப்படியே இருக்கிறது. இன்று இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசத்தில்,குறிப்பாக சாதிய ஒடுக்குமுறை பெருமளவில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் வாய்திறந்து உண்பதற்குக் கூட உரிமையற்றவர்களாக இருக்கும் பட்சத்தில், எப்படி சாதிய விடுதலை பற்றிப் பேசுவது. சாதியம் ஆயுதத்தால் ஒடுக்கப்பட்டுள்ளதே தவிர அழிக்கப் படவில்லை.
சாதியம் ஒழிக்கப்பட வேண்டுமானால் சாதியினால் ஒடுக்கப்பட்டவர்களே அப்போராட்டத்திற்கு தலைமை ஏற்கவேண்டும். அவர்களுடன் முற்போக்கு சக்திகள் கரம் சேர்க்கவேண்டும். ஆனால் இலங்கையில் இப்போது இது சாத்தியம் இல்லை. இருப்பினும் புலம்பெயர் நாடுகளில் ஜனநாயக சூழலில் கற்கவும், தேடவும், விவாதிக்கவும் வாய்ப்புகள் இருக்கிறது. அந்த வாய்ப்புகளுள் நாம் எமது சமூகத்தின் புற்று நோயான சாதியம் பற்றியும் பேச வேண்டியது அவசியம். இங்கிருந்து பேசப்படும் கருத்துகள் விவாதங்கள் இலங்கையில் தமிழர் வாழும் மூலை முடுக்குகளுக்கும் போய்சேரக்கூடிய தொழில் நுட்பவளங்கள் பரவிக்கிடக்கின்றன. அதனூடாக மக்களுக்கு செல்லக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதன் மூலம் அவர்கள் கருத்துக்களை உள்வாங்குவார்கள், பரிசீலிப்பார்கள், முடிவெடுப்பார்கள், செயல்படுவார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



**எறிகணைகள்....**

**இலங்கையில் தமிழ்த்தேசிய அரசியலின் வளர்ச்சிப்போக்கின் ஊடான ஆளுமையின் மத்தியில் அங்கு வாழும் தமிழ் மக்களில் கூடுதலான விகிதாசாரத்தினர் இன்று தலித் மக்களாகவே இருக்கிறார்கள். ஆயுத விதைப்பு மிகவும் தாராளமாகவே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மனித உரிமை மீறல்கள் தேசியமயமாக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் எந்த ஒரு தேசிய அமைப்பின் பின்னணியும் இல்லாமல் தலித்மக்களின் பெயரிலான இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்க மாட்டாது என ஆய்வாளர்களினால் நியாயமாகவே சந்தேகம் எழுப்பப்படுகிறது. இந்த நோக்கு தவறாயின் தமிழ்மக்களின் உரிமைப்போராட்டம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கும் போது அந்தப்போராட்டம் தொடர்பான எந்த முன்வரைவுகளும் இல்லாமல் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்டுவதற்கும்,அதன் தொடர்ச்சியாக புலம் பொயர்நாடுகளில் மட்டும் மாநாடுகள் நாடாத்தப்படுவதற்குமான அவசரத்தேவை தற்போது ஏன் ஏற்பட்டது?**

**தேவதாசன்....**

உங்களது கேள்வி அநியாயமான சந்தேகம். தலித்சமூகம் தனது விடுதலைக்காக எப்போதெல்லாம் போராடமுற்பட்டதோ, அப்போதெல்லாம் தமிழர் உரிமைக்கு இடையூறாக வந்துவிடும் என ஜீ.ஜீ.பொன்னம்பலம் காலத்தில் இருந்தே கூறப்பட்டு வருகிறது. பாடசாலைகளில் படிப்பதற்கு அனுமதியற்ற காலத்தில் அதற்கெதிராக போராட முற்பட்டபோது வெள்ளைக்கார ஆளுநர்களுக்கு சாதிப்பிரச்சினையே கிடையாது எனக்கூறி சாதியை வளர்த்த நிலை இன்றுவரை தொடர்கிறது.

இன்று இருக்கிற எந்தத் தேசிய அமைப்பும் தலித்துகளுக்கென ஒரு அமைப்பு உருவாவதை உள்ளத்தளவில் விரும்பமாட்டாது. நான் முன்னர் கூறியது போல முப்பது வருடகாலம் தேசிய விடுதலை இயக்கங்கள் மீது ஒருவித நம்பிக்கையும், இன்னொருவித ஆயுதபயமும் இருந்தது. ஆனால் இந்த முப்பது வருட காலத்தில் சாதிய அமைப்பு வடிவத்தை அசைக்க எவரும் முயற்சிக்கவில்லை என்பதுதான் நிஜம்.அதனால்தான் எந்த அரசியல் இயக்கத்தையும் சாராத ஒரு சமூகவிடுதலை இயக்கமாக, பெரியாரின் கருத்துக்களை உள்ளடக்கி நாம் தனித்துவமாக செயல்படுகிறோம்.

சாதிய அமைப்புக்கு அனைத்து வெள்ளாளர்களும் எதிரிகள் அல்ல.சிலர் தாம் வெள்ளாளர் எனக்கூறவே கூச்சப்படுகின்றனர். ஏன்தான் இந்தச்சாதியில் பிறந்தோம் என வெட்கப்படுகின்றனர். மாறாக பலர் ஒரு கையிலே சாதியையும் இன்னொரு கையிலே தமிழர் விடுதலையையும் தாங்கிப்பிடித்து வருகின்றனர். இதுதான் இன்றுவரையும் தமிழர்களின் அழிவிற்கு முதற் காரணமாய் இருக்கிறது.

**எறிகணைகள்....**

**ஒரு தலித்மகனின்/மகளின் உணர்வுகளை,அவர்கள் மனதில் ஏற்படுத்தப்பட்ட வடுக்களை அவர்களாலேயே உணர்ந்து கொள்ள முடியும். "அந்தமக்களின் போர்க்குரல் அந்த மக்களிடமிருந்தே ஒலிக்கவேண்டும்". பல தலித்திய சிந்தனையாளர்களினாலும் தெரிவிக்கப்பட்ட இந்தக்கருத்தை நீங்களும் முன்னர் பலதடவைகள் வலியுறுத்தியிருந்தீர்கள். ஆனால் தற்போது உங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அமைப்பில் தலித்துகள் அல்லாத பலர் முன்னணி செயல்பாட்டாளர்களாக இருப்பதும், அண்மையில் உங்களால் நடாத்தப்பட்ட பிரான்ஸ் தலித் மாநாட்டில் கூட கூடுதலான வெள்ளாளர்களே கலந்து கொண்டதும், தொடர்ந்து லண்டனில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கும் மாநாட்டின் ஏற்ப்பாட்டாளர்களும் கூட யாழ்ப்பாண மேலாதிக்க சிந்தனையின் வழிவந்த வெள்ளாளர்களாகவே இருப்பதும் கண்கூடு. ஏன் இந்த நிலைமை? அல்லது இதில் தவறெதுவும் இல்லையா? தமிழ் மக்களின் பிரச்சினையில் பலர் குளிர்காய்வது போல இடதுசாரிய தலித்திய கருத்தாளம் மிக்க தலித்துக்களான உங்களைப் போன்ற ஒரு சிலரை முன்னிலைப்படுத்தி இந்த நெருக்கடியிலும், காய்தல் நாடகம் தொடராக்கப்படுவதாக நீங்கள் உணரவில்லையா?**

**தேவதாசன்....**

தலித்மக்களின் மனதில் ஏற்படுத்தப்பட்டுவரும் வலிகளை அவர்களால்தான் உணர்ந்து கொள்ளமுடியும் என்பது மிக மிக உண்மையானது. பத்து மாதம் கருவை வயிற்றிலே சுமந்து பெற்றெடுக்கும் தாய்க்கு இருக்கும் வலி தந்தைக்கு இருக்காது என்பது உண்மைதான்.அதேவேளை பெண்ணின் வலியை புரிந்துகொண்டு அவளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் மனிதம் உள்ள ஆணைப்போலத்தான்,தலித் சமூகமேம்பாட்டு முன்னணிக்கு ஆதரவு தருவதற்கு பலர் முன்வருகிறார்கள்.

சாதி வடிவத்தை அதனூடான சாதிய ஒடுக்கு முறையை கண்டு பிடித்தவர்களோ வளர்த்தவர்களோ தலித்துக்கள் இல்லை. இலங்கை ஆறுமுகநாவலர் தொட்டு தொடர்சியாக வந்த தமிழ்த் தலைவர்கள் உரம் போட்டு வளர்த்த சாதிப்படிமானங்களையும் ஒடுக்குமுறைகளையும் அழிப்பது ஒவ்வொரு மனிதாபிமானமுள்ள மனிதனதும் கடமையாகும். அந்த வகையில் வெள்ளாளர்கள் மத்தியில் உள்ள முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் எமது முயற்சிக்கு முழு ஆதரவைத் தருகின்றனர். இது அவசியமானதென்றே நாங்கள் கருதுகின்றோம்.

தலித் சமூகமேம்பாட்டு முன்னணி என்பது

தொடர்ச்சி.....5ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: தீண்டாதார் பிரச்சனைக்கு தீர்வு என்ன?

- ரவிக்குமார் -

*ஈழம்: தீண்டாதார் பிரச்சனைக்குத் தீர்வு என்ன?* எனும் தலைப்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த ரவிக்குமார் அவர்கள் 2002 ஆம் ஆண்டில் ஓர் கட்டுரை எழுதியுள்ளார். ரவிக்குமார் அவர்கள் தலித் சமூகத்தைச்சேர்ந்தவர். அவரையும், அவரது எழுத்துக்களையும் 'நிறப்பிரிகை' எனும் சஞ்சிகையினூடாகவே எம்மைப்போல் இலங்கை வாசகர்கள் பலரும் அறிந்திருப்பர் எனக் கருதலாம். ரவிக்குமார் அவர்கள் தற்போது 'காலச்சுவட்டு' முகாமுக்குள்ளும், 'விடுதலைச்சிறுத்தைக்' கூட்டுக்குள்ளும் அடைபட்டு தனது தனித்துவத்தை இழந்த நிலையில் செயல்படும் ஒருவராக தோற்றமளிப்பதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட தலைப்பில் 2002 இல் ரவிக்குமார் எழுதிய கட்டுரையில் எழுப்பப்பட்ட கேள்விகளானது இன்று முன்வைக்கப்படும் இலங்கைத் தமிழருக்குரிய அரசியல் உரிமைகளுக்கான இடைக்காலத் தீர்வு எனும் அம்சத்துக்குள்ளும் கேட்கப்பட வேண்டிய கேள்விகளாகவே தேங்கிக்கிடக்கிறது. அந்தவகையில் ரவிக்குமார் அவர்கள் எழுதிய கட்டுரையில் பல அம்சங்கள் விரிவாக பேசப்பட்டிருப்பினும் குறிப்பாக இலங்கை முஸ்லிம் மக்கள், இந்திய வம்சாவளி மக்கள் பற்றியெல்லாம் அக்கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டிருப்பினும் இலங்கைத் தலித் சமூகம் பற்றிய அவரின் பார்வை மட்டும் இங்கு மீள் பிரசுரமாகிறது.

இலங்கையில் அமைதி திரும்புவதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளில் பிரபாகரனின் செய்தியாளர் சந்திப்பு ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது என பேசப்படுகிறது. ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் நடந்த அந்த செய்தியாளர் சந்திப்பினை சன் டி வி முழுமையாக ஒளி பரப்பியது.

செய்தியாளர் சந்திப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குள் முஸ்லீம்களது பிரச்சனை குறித்தும், மலையக தமிழர் பிரச்சனை குறித்தும் எழுப்பப்பட்ட கேள்விகள் முக்கியமானவை. அவற்றுக்குப் பதிலளித்த பிரபாகரன்/பாலசிங்கம் அந்தத் தலைவர்களைப் பேச்சுவார்த்தைக்காக அழைத்திருப்பதாகவும் அதன் பின்னர் அவை குறித்து முடிவு செய்யப்படுமெனவும் தெரிவித்தனர். அதுபோலவே இப்போது அவர்களோடு உடன்பாடும் எட்டப்பட்டுள்ளது.

இரண்டரை மணி நேரம் அந்த நிகழ்ச்சியைப் பார்த்து முடித்ததும் நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். அங்கு கேட்கப்படாத கேள்வியைக் குறித்தும் சொல்லப்படாத பதிலைக் குறித்தும் நான் கவலை கொண்டேன். ஈழத் தமிழர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்காக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையைப் பற்றி ஒருத்தரும் கேள்வி எழுப்பவுமில்லை, எனவே பதில் சொல்லப்படவுமில்லை. அதுதான் என் மன உளைச்சலுக்குக் காரணம்.

ஏன் இந்த நிலை? அங்கு தாழ்த்தப்பட்டோர் பிரச்சனை தீர்ந்து போய்விட்டதா? நிச்சயமாக இல்லை. ஈழத்து எழுத்தாளர் என்.கே. ரகுநாதன் தனது கந்தன் கருணை நாடக நூலின் முன்னுரையில் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ளதுபோல (11-12-1999) "துப்பாக்கி நிழலில் சாதிகள் மறைந்து கிடக்கின்றன, மரித்து விடவில்லை". அப்படியானால் ஏன் அது பற்றி எவரும் கேள்வி எழுப்பவில்லை.அதற்கான சமூக நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தக்கூடிய தாழ்த்தப்பட்டோர் அரசில் இயக்கம் தற்போது இல்லாததே அதற்கான முக்கியமான காரணமாகும். ஆனால் இலங்கையின் வரலாற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் பல்வேறு அரசில் இயக்கங்களை உருவாக்கிஆற்றல் மிக்க போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் தீண்டாமை ஒழிப்புக்காக ஆயுதம் ஏந்திப் போராடியதன் மூலம் தமிழ் நாட்டைக்காட்டிலும் முன்னே நின்றவர்கள் அவர்கள். இப்போதோ அவர்களுக்கென தனி இயக்கம் இல்லாததால், அவர்களது பிரச்சனை அங்கு எழுப்பப்படவில்லை. எனவே இன்று அங்கே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையைப் பற்றிப் பேசி அவர்களது உரிமைகள் நிலைநாட்டப்பட ஒரு அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டிய கடமை தமிழ் நாட்டிலுள்ள தலித் இயக்கங்களுக்கும் தலித் சிந்தனையாளர்களுக்கும் உள்ளது.

ஈழத்துச் தமிழ்ச் சமூகம் இன்று தமிழ் நாட்டுக்கு முன்னோடியாகக் காட்டப்படுகிறது.. ஆயுதப் போராட்டத்தில் அவர்கள் ஏற்படுத்தியுள்ள "சாதனையை" இங்கே இருக்கும் தமிழ்த் தேசியவாதிகள் முன்னுதாரணமாகக் காட்டுகின்றனர். அதைவிடவும் வேறுசில "சிறப்புகளும்" ஈழத்துக்கு உண்டு. ஆறுமுக நாவலரைத் தந்தது அந்த சமூகம்தான். "பறையும், பெண்ணும், பஞ்சமரும் அடிவாங்கப் பிறந்தவை" என்ற அரிய கருத்தைச் சொன்னவர் ஆறுமுகநாவலர். இன்றளவும் அங்கே வேர் கொண்டிருக்கிற சாதி வெறியை நீரூற்றி வளர்த்தவர் அவர்...

....அங்கிருக்கும் பிரச்சனைக்கு தமிழ்நாட்டில் இருந்துகொண்டு எப்படி கேள்வி எழுப்பலாம் என்று யாரேனும் கேட்கலாம் "இந்தியா எங்களது தந்தை நாடு" எனவும் "தமிழர்களோடு எங்களுக்கிருப்பது தொப்புள்கொடி உறவு" எனவும் புலிகள் மீண்டும் மீண்டும் அழுத்தமாகத் தெரிவித்துள்ளனர். அவர்கள் நினைவுபடுத்தும் உறவோ ஆதிக்கத்தின் அடிப்படையிலானது. ஆனால் இலங்கையில் தீண்டாமை என்னும் கொடுமைக்கு ஆளாக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்களோடு தம்மை

www.padippakam.com

இணைப்பதோ பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலான தோழ-மையாகும். பறையும், பெண்ணும், பஞ்சமனும் அடிபடப் பிறந்தவை என்று சாதித் திமிரோடு சொன்ன ஆறுமுகநாவலரைச் சொந்தம் பாராட்ட இங்குள்ள சாதித் தமிழர் முன்வரும்போது அதற்கு இவர்களுக்கு உரிமை இருக்கும்போது நாம் படுவதுபோன்ற கொடுமையை எதிர்கொண்டு அல்லல்படும் ஒருத்தனின் துயரத்தைப் பகிர்ந்துகொள்ள நமக்கெப்படி உரிமையில்லாமல் போய்விடும்.

அதுமட்டுமல்ல இன்று சிங்கள அரசை சமாதான மேசைக்கு இழுத்து வந்துள்ள தீரமிக்க போராட்டத்தை நடத்தியதில் தாழ்த்தப்பட்டவர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர். யுத்தம் அவர்களுக்கு ஒரு மதிப்பை, தேவையை ஏற்படுத்தியிருந்தது. தமிழரசுக் கட்சியினர் எத்தகைய நிர்ப்பந்தத்தில் அன்று தாழ்த்தப்பட்டோர் பிரச்சனையைப் பேசினார்களோ அதேவிதமான நிர்ப்பந்தத்தினால்தான் இன்று புலிகள் தாழ்த்தப்பட்டோரை இயக்கத்தில் வைத்துள்ளனர். ஆனால் தமிழரசுக் கட்சி எப்படி அவர்களை கைவிட்டதோ அப்படி புலிகளும் தாழ்த்தப்பட்டோரை கைவிடுகிற நிலை ஏற்பட்டுவிடக்கூடாது.

இந்த அச்சம் தேவையற்றது என சாதித் தமிழர்களால் சொல்லப்படலாம். ஆனால் இந்தியாவின் வரலாறு இந்த அச்சத்தை நியாயப்படுத்துகிறது.

1857ல் நடந்த சிப்பாய்க் கலகத்தின்போது பம்பாய் மற்றும் சென்னையிலிருந்து படைகள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டிருந்தன பம்பாய் ராணுவம் மகர்களையும், சென்னை ராணுவப் பிரிவு பறையர்களையும் கொண்டிருந்தது. ஆனால் 1890 ல் இந்திய ராணுவத்தில் தீண்டாதார் சேர்வதற்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது.

ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் இந்துக்கள் பெருமளவில் ராணுவத்தில் சேரவில்லை அப்போது தீண்டாதாரே பிரிட்டிஷ் ஆட்சிக்கு உற்ற துணையாய் ராணுவத்தில் இருந்துள்ளனர். இந்திய ஆட்சி அதிகாரம் அரசர்களது கைகளிலிருந்து பிரிட்டிஷார் கைக்கு மாறி, அரசர்கள் செல்வாக்கிழந்தபோது இந்துக்கள் பிரிட்டிஷ் படைகளில் சேர வந்தனர். ஏற்கனவே படைகளில் இருக்கும் தீண்டாதாரை விரட்டினாலன்றி தங்களுக்கு இடம் கிடைக்காது என்பதால் இந்துக்கள் தீண்டாதாரைப் படைகளில் சேர்க்கக் கூடாது என நிர்ப்ந்திக்க ஆரம்பித்தனர். இந்துக்களின் நெருக்குதலுக்குப் பணிந்து பிரிட்டிஷ் அரசும் தடைவித்தது. தங்களுக்கு நெருக்கடியான காலத்தில் கைகொடுத்த தாழ்த்தப்பட்டோருக்கு பிரிட்டிஷ் அரசு துரோகமிழைத்தது.

அதேபோன்றதொரு நிலை இப்போது இலங்கையில் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நாம் கவலைப்பட வேண்டியுள்ளது. யுத்தம் ஏற்படுத்திய ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தை சமாதானம் வந்து பறித்துக் கொண்டுவிடக்கூடாது

> "பறையும், பெண்ணும், பஞ்சமரும் அடிவாங்கப் பிறந்தவை" என்ற அரிய கருத்தைச் சொன்னவர் ஆறுமுகநாவலர். இன்றளவும் அங்கே வேர் கொண்டிருக்கிற சாதி வெறியை நீருற்றி வளர்த்தவர் அவர்...

ஏனென்றால் சமாதானம் எட்டப்பட்டு ஒரு இடைக்கால அரசு அமைந்தால் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் சாதித் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவார்கள் அந்த நாடுகளில் ஊட்டி வளர்த்த சாதியுணர்வையும் அவர்கள் தம்மோடு அழைத்து வருவார்கள். மீண்டும் யாழ்ப்பாண சமூகம் ஆறுமுக நாவலரின் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு செயல்பட வேண்டிய நிலை வரும் இப்போது உயிர் அச்சத்தால் தீண்டாதாரின் சுதந்திர நடமாட்டத்தை அனுமதிக்கும் சாதித் தமிழர்கள் அந்த அச்சம் விலகிவிட்டால் மீண்டும் தம் மண்டைக்குள்ளிலிருந்து சாதிய நச்சரவுகளை எடுத்து தெருவில் விடுவார்கள். இந்த நிலை ஏற்படாமலிருக்க சில உத்தரவாதங்களைத் தாழ்த்தப்பட்டோர் பெறவேண்டும். தற்போது மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம்களோடு என்னவிதமான ஒப்பந்தம் போடப்பட்டதென்கின்ற முழுமையான விபரம் நமக்குத் தெரியவில்லை. ஆனால் நீண்ட நெடுங்காலமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் இப்போதும் நிறைவேற்றப்படாமல்தான் உள்ளன. இந்தியாவில் இருப்பதுபோன்ற இட ஒதுக்கீடோ அரசியல் அமைப்புச் சட்டபாதுகாப்போ அல்லது அமெரிக்காவில் உள்ளது போன்ற ஒத்தாசை நடவடிக்கைகளோ (Affirmative Actions) இலங்கையில் நடைமுறையில் இல்லை. அங்கு இருப்பது எதற்கும் பிரயோசனப்படாத 1957 ஆம் வருடத்திய சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் மட்டும்தான்.

ஆகவே தாழ்த்தப்பட்ட மக்களது பிரச்சனையென்பது முஸ்லிம்களது பிரச்சனைபோல, மலையகத் தமிழர் பிரச்சனை போல தனிக் கவனம் செலுத்தி அணுகப்பட வேண்டிய தனித்துவமான பிரச்சனையாகும்.

*'கடக்க முடியாத நிழல்' எனும் ரவிக்குமாரின் கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒருபகுதி*

---

*3ம் பக்கத் தொடர்ச்சி...*

தலித்துகளுக்காக தலித்துகளால் அமைக்கப்பட்ட முன்னணியாகும்,ஒரு காலத்தில் இலங்கையில் இடதுசாரிகள் மிகப்பெரும் பலத்துடன் அரசியல் இயக்கம் நடத்தியவர்கள். சோவியத் யூனியன் உடைவு, சீனப் பொருளாதார மாற்றம், ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி என்பன சிறிய நாடான இலங்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியதென்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அதன்பின்னர் உலகம் முழுவதிலும் உள்ள முற்போக்காளர்கள், புரட்சியாளர்கள் பலவகையான சிந்தனைப் போக்குடன் உலகமாற்றங்களை ஆய்வுசெய்ய ஆரம்பித்தனர். இந்த அடிப்படையில்தான் பின் நவீனத்துவம், தலித்தியம் என்பன உருப்பெற்று வளர்கிறது. இச்சிந்தனை மாற்றங்கள் இலங்கைத்தமிழர்களை பொறுத்த வரையில் ஒருசில புத்தி ஜீவிகள் மட்டத்தில் மட்டுமே ஆய்வுக்கு உட்பட்டதாக இருக்கிறது. இது இன்னமும் பல மட்டங்களில் பேசப்படவேண்டும், விவாதிக்கப்படவேண்டும், பரிசீலிக்கப்படவேண்டும் இதுவும் தலித் சமூகமேம்பாட்டு முன்னணியினர் நடாத்தும் மாநாடுகளின் நோக்கமாக இருக்கிறது. அந்த வகையில் பங்கு கொள்பவர்கள் யார்? என்ன சாதி? என்பது முட்டாள்தனமான பார்வையாக இருக்கும். தலித்திய கருத்துக்களைப்பற்றி பேச முற்படுபவர்களை அதுபற்றி தேட முனைபவர்களை குளிர்காய்தலுக்குள் உள்ளடக்கி கொச்சைப்படுத்துவது விசமத்தனமானதும் சாதி அமைப்பை தொடர்ச்சியாக கட்டிக்காக்கும் முயற்சியுமாகும்.

நன்றி - எறிகணைகள் இணையத்தளம்



படிப்பகம்

www.padippakam.com

# நினைவுக்குறிப்புகள்

தொடர் . . 5

## தோழர். யோகரெட்ணம்

# தீண்டாமைக் கொடூரங்களும் தீ மூண்ட நாட்களும்

சண்டிலிப்பாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 6 ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த என்னையும், 8ம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த எனது சகோதரன் (இவர் 1987 ம் ஆண்டு ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிறிது நாட்களின் பின் மரணமானார்) விஜரத்தினத்தையும் எங்கள் அக்கா (ஆசிரியை நாகரத்தினம்) சுண்ணாகம் ஸ்கந்தவரோதயா பாடசாலையில் சேர்வதற்கான தகுதிப் பரீட்சை எழுத அனுப்பி வைத்தார். நாம் இருவரும் அனுமதிப்பரீட்சையில் சித்தி அடைந்தோம். எனக்கு மீண்டும் 6 ம் வகுப்பிலிருந்து படிக்கும்படி அன்றைய அதிபர் ஒறேற்றர் புத்திமதி கூறினார். 6 டி வகுப்புப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதுடன், எனது வகுப்பாசிரியராக ஆசிரியர் திரு.ஆறுமுகம் கடமையாற்றினார்.

நானும் அண்ணனும் காலை 7.15 க்கு ஓட்டமும் நடையுமாக செல்கின்ற போது ரகு யர், ராதா யர், கொட்டாவத்தை பாலு (இவர்கள் பெரிய வகுப்பு) ஆகியோரும் சேர்ந்து வயல் பாதை வழியாக கண்ணகை அம்மன் கோயிலை ஊடறுத்து (மழை இல்லாத காலம்) கந்தரோடை குளம் வழியாக கல்லூரிக்கு சென்று வருவோம். எமது வீட்டில் ஆளுக்கு 25 சதம் தருவார்கள். 10 சதம் பஸ் பிரயாணத்திற்கும், பாணும் சம்பலும். சாப்பிட 15 சதம். அம்மா சிலவேளைகளில் எங்களுக்கு சாப்பாடு கட்டியும் தருவா. நானும் அண்ணையும் மற்றவர்களுடன் நடையில் செல்லும் போது பஸ்காசை சேமித்து அதற்கு ஸ்பழம், கடலை கரம் சுண்டல் என வாங்கிச் சுவைப்போம்.

இவ்வாறு நாம் சந்தோசமாக பாடசாலைக்கு சென்று வரும் போது ஒரு நாள் மாகியப்பிட்டியை சேர்ந்த ஒரு மாணவன் என்னை எனது சாதிசொல்லி நளவன் வாறான்.., நளவன் வாறான்., என இராகமாக மேசையில் தட்டி மற்றமாணவ மாணவிகளுடன் சிரித்து மகிழ்ந்தான். வெட்கமாகவும் வேதனையாகவும் இருந்தது. அவனுக்கு அடிக்க மனம் வந்தபோதும், ஏனோ நான் மௌனமாகி விட்டேன். எப்போது சாப்பாட்டுக்கு மணி அடிப்பார்கள் என மனம் ஏங்கியது. மணியும் அடித்தார்கள். நான் அண்ணனின் வகுப்புக்கு ஓடினேன். நடந்த விடயத்தை கூறி அழுதேன்.

அண்ணன் என்னை சாதிசொல்லிக் கிண்டல் செய்த சக மாணவனை கண்டித்தார். அதை அவன் தன் சகோதரர்களிடம் சொல்லிவிட்டான். பாடசாலை முடிந்து வெளியேவரும்போது அவனின் சகோதரன் மற்றும் அவனது நண்பர்கள் சேர்ந்து அண்ணையை அடிக்க வந்தார்கள். இவர்களில் சுண்ணாகம் பிரபல சட்டத்தரணி யக்கோன் அவர்களின் மகனும் ஒருவன். மறுநாளும் அதே பிரச்சனை. அண்ணன் யக்கோனின் மகனுக்கு அடித்துவிட்டான். சண்முகம் கடைக்கு முன்னால் வைத்தே இது நடந்தது. இதுவே பிற்பாடு எமது வீட்டில் பெரியரகளையாகும் என்பதை எமது மனம் முன்னுணரவில்லை. அண்ணன் பாடசாலைக்கும் வராமல் வீடு வந்துவிட்டார். இவை சற்று ஓய்ந்து விட்டபோதும் அண்ணன் படிப்பை தொடரமுடியாத நிலை. கல்லூரிக்கு வரமுடியாது, வந்தால் இந்த சாதி வெறியர்கள் தாக்குவார்கள். எனது அண்ணன் வீட்டிலிருந்து கல்லூரிக்கு போவதாக என்னுடன் வந்து வயல்வெளி வந்ததும் தம்புவின் திட்டி மண்ணடிக்கு போய் விடுவார். எனக்கு சொல்வார் நான் வந்தால் கல்லூரியில் அடிப்பார்கள் நீ அம்மா யாவுக்கும் அக்காவுக்கும் சொல்லாதே என்று. சில வேளைகளில் கெஞ்சிநிற்பார். நான் தனித்து செல்லவேண்டிய கட்டாயம். என்னையும் ஒருசிலர் வெருட்டினர். பின் மெல்ல மெல்ல அச்சம்பவம் தணிந்துவிட்டது. நாட்கள் செல்ல அண்ணனின் குட்டும் வெளிவந்தது. வீட்டில் விசாரணை நடந்தது. என்னை கட்டி வைத்து மிளகாய்தூளை தலையில் கொட்டி தம் கோபத்தை அக்கா தணித்துக் கொண்டார். இப்போது இங்கு பிரான்ஸ் வந்த பின்னர் கூட எனது மிளகாய்த்தூள் அபிஷேகத்தை நினைவுபடுத்தி கடிதம் எழுதியிருக்கின்றா.

கந்தரோடையில் படிக்கும் போது வகுப்பறையில் சாதிசொல்லி சிரித்துக் கொண்டாட்டம் போட்டவனை அடித்ததும், பின் சுண்ணாகம் யக்கோனின் மகனுடன் அண்ணன் அடிபட்டதனையும் நாம் கல்லூரிக்கும், எமது வீட்டிற்கும் தெரியப்படுத்த தவறியதோடு அண்ணன் பள்ளிக்கூடம் செல்வதாக வந்து வயல் வெளியில் இடையில் குழப்பிவிட்டு அந்திரான் தம்புவின் திட்டிக்கு செல்வதையும் நான் சொல்லாமல் மறைத்ததினால்தான் கோபத்தில் என்னை கட்டிவைத்து மிளகாய்தூள் தலையில் கொட்டி அடித்தார் என் அக்கா! நான் கல்லூரியில் நடந்த சம்பவங்களை வீட்டில் வந்து கூறாததன் விளைவால் என் படிப்பை கந்தரோடையில் தொடர முடியாமல் போனது. வகுப்பாசிரியரிடம் கூறி இருந்தால் மேலும் சில சிக்கல் வராமல் தடுத்திருக்கலாம். அன்றைய சிறுவயது எதனையும் முன் உணர முடியவில்லை. இதனால் ஸ்கந்தவரோதயா பாடசாலையிலிருந்து விலகி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் வந்து சேர்ந்து கொண்டேன். அண்ணனும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டபோதும் அண்ணன் தொடர்ந்து அங்கு படிக்க மறுத்துவிட்டான். நான் 8 ம் வகுப்பில் இருந்து அங்கு எனது கல்வியைத் தொடர்ந்தேன்..

பள்ளிக்கூடம் எனது வீட்டிற்கு சமீபமாக இருப்பதும் ஒரு வகையில் சௌகரியமானது. இக்கால வேளையில்தான் வட பகுதியில் தீண்டாமைக்கெதிரான போராட்டம் தொடங்கியது.

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com



# இலங்கையிலிருந்து வருகைதந்த தோழர் ரி.கே. செந்தில்வேலுடன் பிரான்ஸ் இலங்கைத் தலித் சமூகமேம்பாட்டு முன்னணியினரின் உரையாடல்.

தோழர் ரி.கே.செந்தில்வேல் அவர்கள் இலங்கை புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச்செயலாளராக செயல் பட்டு வருபவர். கடந்த காலங்களில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டங்களின் தீவிர செயல்பாட்டாளராகவும் இயங்கிவந்தவர். பிரான்ஸ் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினர் தமது வேலைத் திட்டங்கள் சார்பாக அவரது அபிப்பிராயங்களைக் கோரியபோது அவர் தனது கடந்த கால தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்காக மேற்கொண்ட போராட்ட அனுபவங்களையும். தற்போது நிகழும் போர்ச் சூழல் நிலைமைகள் தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாடுகள் பற்றியும் பிரான்ஸ் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினருடன் கலந்துரையாடினார்.

## அவ்வுரையாடலின் சுருக்கம்.

தோழர் செந்தில்வேல் அவர்கள் முதலிலேயே தலித் எனும் சொல்லாடலில் தமக்கிருக்கும் முரண் நிலை பற்றிக் கூறினார். தலித் எனும் சொல் இந்தியாவில் உபயோகிக்கப்படுகின்ற சொல்லாகவே இருக்கிறது. இருப்பினும் அச்சொல்லை பிரயோகிப்பவர்களுக்கிடையே தானும் க்கியமான செயல்பாடுகள் நிலவுகிறதா? என கேள்வி எழுப்பியதோடு, தலித் எனும் சொல் இந்தியாவிலிருந்து செயற்கையாக இலங்கைக்கு கொண்டு வந்ததை நாம் அங்கீகரிக்கவில்லை. 'தாழ்த்தப்பட்ட மக்கள்' எனும் சொல்லாடலே அதற்கு பொருத்தமானதாக நாம் கருதுகின்றோம் எனக் கூறினார்.

தலித் எனும் சொல்லாடலானது சர்வதேச ரீதியான கவனம் பெற்றுள்ளதையும். அச்சொல்லாடலின் அவசியம்பற்றி எமது தோழர்கள் எடுத்துக் கூறினர். பின்னர் தனது இளமைக்கால அனுபவங்கள் சிலதை எம்முடன் அவர் பகிர்ந்து கொண்டார்.

1964 ஆண்டில் வாலிப இயக்க மாநாட்டில் தான் மாணவனாக பங்கு கொண்டு பேசிய போது வடபகுதியில் சாதியத்திற்கு எதிராக பேசாத இயக்கம் ஓர் புரட்சிகர இயக்கமாக இருக்க முடியாது என தான் பேசியதையும் நினைவு கூறினார்.

1966 ஒக்டோபர் 21 இல் நடைபெற்ற போராட்டத்தில் உயர்சாதியினரின் பங்களிப்பும், அதில் பலர் தாழ்த்தப் பட்ட மக்களின் பிரச்சனைகளில் உணர்வு பூர்வமாகச் செயல் பட்டவர்களென்றும் கூறினார். அவர்களின் உணர்வு பூர்வமான செயல்பாட்டிற்கு உதாரணமாக «எச்சாமம் சென்று எதிரிகள் நுழைந்தாலும் நிச்சாமம் கண் நெருப்பெறிந்து நீறாக்கும், குச்சுக் குடிசைக்குள் கொலுவிருக்கும் வீரத்தை, மெச்சுகிறேன் நான் உனக்கு..» என்ற 'சங்கானைக்கு என் வணக்கம்' எனும் தலைப்பில் உயர் சாதியைச் சேர்ந்த கவிஞர் சுபத்திரன் எழுதிய கவிதையை சுட்டிக் காட்டினார்.

இன்றைய நிலையில் தமிழ்தேசியத்தின் உக்கிரத்திற்குள் யாழ்ப்பாணத்து தலித் கிராமங்களின் நிலைபற்றி நாம் அவரிடம் வினவியபோது «யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள புத்தூர் எனும் கிராமம் மட்டுமே இன்னும் புலிகளின் செல்வாக்குக்கு உட்படாமல் இருக்கும் கிராமமாகும். அங்கு எமது கட்சியின் தீவிரமான வேலைத்திட்டங்களே அதற்குக் காரணமாகும். அங்குள்ள நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதிலும், பல முரண்பாடுகளை இனம் கண்டு மக்களை க்கியப்படுத்தியதிலும் எமது கட்சி பெரும்பணியாற்றியிருக்கிறது» எனவும் குறிப்பிட்டார். புத்தூர் கிராமத்தில் இராணுவம் நுழைந்து தேடுதல் நடத்துகின்றபோது «எம்மை சுடுவதானால் புலிகள் என்று சுடவேண்டாம் எம்மை கொம்யூனிஸ்டுக்கள் என்று சுட்டால் நாம் அதை ஏற்றுக் கொள்கின்றோம் என்று இராணுவத்திடமே அஞ்சாமல் கூறுமளவிற்கு புத்தூர் எமது கட்சியின் ஆதரவுள்ள கிராமமாகத்தான் இன்றும் இருக்கிறது» எனவும் கூறினார்.

«இன்றைய தேசியப் போராட்டத்தின் கூர்மையான போக்கின் காரணமாகவே எமது கட்சியின் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான போராட்டமும் சற்று பின்னடைவு நிலைக்கு சென்றுள்ளது. இருப்பினும் இன்றைய இன முரண்பாடே பிரதான முரண்பாடாக இருக்கும் போது சாதிய முரண்பாடுகளை எவ்வாறு அணுகுவதென்பதும் சிக்கலான பிரச்சனையாகவே உள்ளது. இன்று எம்மத்தியில் வர்க்க, இன, சாதிய, பெண்ணிய முரண்பாடுகளென நான்கு பிரதான முரண்பாடுகளை நாம் இனம் காண்கின்றோம் . இருப்பினும் வர்க்க முரண்பாடே முதன்மையாக இருக்கின்றது. யாவுமே வர்க்க முரண்பாட்டின் விளைவுகள்தான். இவைகளுடன் சாதிய முரண்பாடும் இருக்கு. பிரதேச முரண்பாடும் இருக்கு. அத்துடன் கருத்தியல் முரண்பாடாக இந்துத்துவ, பார்ப்பனிய முரண்பாடாகவும் இருக்கிறது. இவைகளுக்குள் பேரினவாத முரண்பாடே கூர்மையடைந்த நிலையில் கவனம் பெற்றிருப்பதால் அவற்றிற்குத்தான் முதன்மை இடமளிக்க வேண்டியுள்ளது. அதனை நாம் கவனமாகக் கையாளவும் வேண்டியுள்ளது.»

தமிழ் பேசும் இனங்களுக்கிடையேயுள்ள சிறுபான்மை இனங்களான முஸ்லிம்கள் தலித்துக்கள், கிழக்குவாழ்மக்கள், மலையகமக்கள் போன்ற சமூகங்கள் மீது, தமிழ் 'மேலாதிக்க' அரசியல் தலைமைகளானது எவ்விதமான போக்கை கடைப்பிடித்து வந்துள்ளது? அவை மிதவாதிகளானாலும் சரி, தீவிரவாதிகளானாலும் சரி இன்றுவரை அச்சமூகங்களுக்கு நம்பிக்கை அழிக்கக் கூடிய செயல் பாடுகள் எதையும் முன்வைக்காத நிலையையே கவனமாகவும், கள்ளத்தனமாகவும் பேணிக் காத்து வருகிறார்களே!!

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

சி.பா.த. மகாசபையை விட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மிகவும் தீவிரமாக தலித் சமூகப் போராட்டங்களை முன்னெடுத்தது. சங்கானையிலிருந்து மாணவர்கள் இந்துக்கல்லூரிக்கு படிக்க வருவதால் பலரின் நட்பு எனக்கு ஏற்படலாயிற்று. நிற்சாமத்தை சேர்ந்த விக்னேஸ்வரன் (தற்போது டென்மார்க்கில்), காசிநாதன் (விஸ்வமடு), துரைராசா (கொழும்பு), புலேந்திரராசா, அமிர்தலிங்கம் (இவர் வெளிநாட்டில்), இப்படி பலர் என்னுடன் படித்து வந்தனர். அமிர்தலிங்கம், புலேந்திரன் இவர்களை தவிர மற்றவர்கள் உயர் வகுப்பு மாணவர்கள். அமிர்தலிங்கம் என் சக மாணவன்.

ஒருநாள் சங்கானை தேனீர்கடை பிரவேசம் (1967இல்) நடக்க ஏற்பாடுகள் நடக்கின்றன என்று விக்கினேஸ்வரன் எமக்கு சொன்னார். நான் அமிர்தலிங்கம் வீட்டிற்கு போய் (புளியடி) அவரையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து இருவருமாக நிற்சாமத்திற்கு நடந்து சென்றோம். அங்கு இளம் பெடியள் கூட்டம், கூட்டமாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கு எங்களைக் கண்டுகொண்ட விக்கியண்ணை (விக்கினேஸ்வரன்) வந்து "எட நீங்கள் ஏன்ரா வந்தனியள்! அங்க வர வேண்டாம் சில வேளை சண்டைவரும்" என்று பயமுறுத்தினார். இருந்தும் நாம் அவர் பின்னால் போக முயன்றபோதும் எமது முயற்சி பலனின்றி போனது. மறுநாள் அறிந்தோம் சாதிவெறியர்களின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணமானதாக. அத்தியாகிதான் சின்னர் கார்திகேசு - 12-08-1967 இல் நடந்தது.

கலவரத்தின் பிற்பாடு அமிர்தலிங்கமும், விக்கியண்ணையும் பள்ளிக்கூடம் வரவில்லை. எனக்கும் வீட்டிலிருந்து எங்கும் செல்லக்கூடாது என்ற கண்டிப்பு. இக்கால கட்டத்தில்தான் சிங்கப்பூரிலிருந்து வந்த நிற்சாமத்தினை சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் மடத்தடி சண்டிலிப்பாயில் வசித்துவந்தார். இவரின் மகன்களில் ஒருவரான வரதராசா, என்னுடன் கூட படித்தவர். இளையவரின் பெயர் செல்வராசா. வரதராசா டென்மார்க்கிலும், செல்வராசா கொலண்டிலும் தற்போது வசிக்கறார்கள். திரு.சின்னத்தம்பி அவர்கள் ஒரு நோயாளியாக இருந்த போதும் சமூக விடுதலையில் ஆர்வம் மிக்கவர். நிற்சாம மக்களுக்கான போராட்ட நிதியை சண்டிலிப்பாயில் அவரே சேகரித்து வந்தார். அவரின் நிதி சேகரிப்பு முயற்சியில் என்னையும் இணைத்துக் கொண்டேன். தலித் மக்களிடம் தாராள மனம் இருந்த போதும் பொருளாதாரம் இடம் தரவில்லை. தம்மால் முடிந்த உதவிகளை நல்கினர். நான் சில நேரங்களில் சின்னத்தம்பியுடன் நிற்சாமம் செல்வதும் வழக்கம்.

சாதிவெறியர்கள் அங்கும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தினர். அவர்களின் தோட்டங்களிலும், வயல்களிலும், தலித் மக்கள் தொழில் செய்ய முடியாத பரிதாப சூழல். பலதரப்பட்ட கஸ்ரங்களை அக்கிராம மக்கள் அனுபவித்தனர். இருந்தும் உறுதியாக நின்று போராடினர். அக்கிராம மக்களின் உறுதியான நெஞ்சுரம் மிக்க போராட்டத்தை இன்றும் எண்ணி பிரமிக்கிறேன். போராட்டம் வடபகுதி எங்கும் பரவியது... பாடசாலையில் போராட்டம் பற்றிய பேச்சாகவே இருந்தது. "அச்சுவேலியில் சண்டையாம். தவராசா என்பவனை சுட்டுவிட்டார்களாம்" அதுபோல தைப் பொங்கல் அன்று "சங்கானை கோவியன் செம்பனை (இவன்தான் தேனீர்கடை பிரவேசத்தின்போது துப்பாக்கி பிரயோகம் செய்தவன்) சுட்டுவிட்டார்களாம். மட்டுவிலில் மந்திகை இரத்தினத்தை சாதி வெறியர்கள் பலர் சேர்ந்து கொன்று விட்டார்களாம்" இப்படியே நாளுக்கு நாள் செய்திகள் பரவிக் கொண்டே இருக்கும். இளவட்டங்களாகிய எமக்கும் இதயத்தில் கனல் நீறுபூத்து உறங்கிக் கிடக்கும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அரசின் இன ஒடுக்கு முறை, எனவே ஒன்று படுங்கள். தமிழ் பேசும் அனைத்துத் தரப்பினரும் பொங்கி எழுங்கள். என்றெல்லாம் கோரப்படுகிறதே..! இது என்ன நகைச்சுவை. இன அழிப்பு என்பதன் அர்த்தம் தான் என்ன!!! மனிதப் படுகொலைகள் குறித்துப் பேசப்படும் பொருள்தானே இன அழிப்பென்பது. ஆனால் எம்மவரால் எம்மவர்கள் கொல்லப்பட்டதன் எண்ணிக்கையே சிங்கள இராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமிழர்களை விடவும் (உலக மனித உரிமை அமைப்புகளின் செய்திகள்) மிக அதிகமாக உள்ளபோது எங்கிருந்து இன அழிப்பு முளைக்கிறது?

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை கொடுக்க மறுக்கிறது எனவே தமிழ் மக்களே ஒன்று படுங்கள் என்றால். தலித் மக்களாகி எமக்கு என்ன நம்பிக்கைகள் அந்த அரசியல் உரிமைகள் பெறுவதனூடாக.? சமூக உரிமைகளே புறக்கணிக்கப்படும் போது அரசியல் உரிமைகளால் நாம் பெறப் போகும் நன்மைகள் தான் என்ன.?

**இதுவே இன்றைய பேசப்படும் தமிழ் அரசியல் உரிமைகள் மீதான இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரின் கேள்விகளாக உள்ளது.**




தொடர்புகளுக்கு:
00 33 661 803 690
00 33 660 368 804
00 44 7793 794 362
00 44 7702 812 397

## 2வது தலித்மாநாடு

16, 17 பெப்ரவரி -2008

இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினரால் இரண்டாவது தலித் மாநாடு 2008. பெப்ரவரி 16. 17 களில் லண்டனில் நடத்தப்படவுள்ளது. மாநாட்டின் அமர்வுகளில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது இருக்கைக்கு முன்பதிவுகள் செய்துகொள்ள வேண்டும்.




படிப்பகம்